தாராபுரம் (தனி) தொகுதி இடைத்தேர்தல்! கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பிரச்சாரம்!



இன்று : (02.10.2026 - வெள்ளிக்கிழமை)

நேரம்	ஒன்றிய / நகர / பேரூர்க் கழகங்கள்	இடம்
காலை 10.30	தாராபுரம் நகரம்	தாராபுரம் அமராவதி சிலையிலிருந்து பொள்ளாச்சி சாலை - பெரியகடை வீதி வழியாக 'ரோடு ஷோ'
மாலை 5.00	தாராபுரம் நகரம்	உடுமலை சாலை மல்லி ரிசார்ட் அருகில் பொதுக்கூட்டம்

தேர்தல் பணிக்குழு

101 - தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி

அனைத்து சனிக்கிழமைகளும் பொதுத்துறை வங்கிகளுக்கு விடுமுறை என வெளியான தகவல் வதந்தி!

புதுடெல்லி,அக்.2- அனைத்து சனிக்கிழமைகளும் பொதுத்துறை வங்கிகளுக்கு விடுமுறை என மத்திய அரசு அறிவித்ததாகப் பரவும் தகவல் வதந்தி என அகில இந்திய வங்கி ஊழியர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் வெங்கடேசன் தெரிவித்துள்ளார். மத்திய அரசு அறிவித்தது போன்று போலியான சுற்றறிக்கை சமூக வலை தளங்களில் பரவி வரும் நிலையில், அதனை நம்ப வேண்டாம் என விளக்கம் அளிக்கப் பட்டுள்ளது.

அரசு வழக்கறிஞர் நியமன ஊழல் – பல கோடி ரூபாய் Party Fund வாங்கிய த.வெ.க.?

நீதிமன்றத்தில் அம்பலப்பட்ட த.வெ.க.- வின் மெகா ஊழல் - தூய சக்தியல்ல TVK ஒரு திருட்டு சக்தி!

தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கை!

சென்னை, அக்.2- அரசு வழக்கறிஞர் நியமன ஊழல் - பல கோடி ரூபாய் Party Fund வாங்கிய த.வெ.க.? என்றும், நீதிமன்றத்தில் அம்பலப்பட்ட த.வெ.க.-வின் மெகா ஊழல் தூய சக்தியல்ல TVK ஒரு திருட்டு சக்தி என்றும், தி.மு.க. அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

ஊழலை ஒழிக்கும் உத்தம ஆட்சி போல வேடம் போட்ட தவெக அரசின் முகத்திரையை கிழித்து தொங்கவிட்டுள்ளது நீதி மன்றம். ஆட்சிக்கு வந்தவுடனே அரசு வழக்கறிஞர் நியமனத்தில் Party Fund Collect பண்ண தொடங் கிவிட்டது தவெக அரசு என பல புகார்கள் எழுந்தன. அரசு வழக்க றிஞர் நியமனத்தில் 5 லட்சம் முதல் 30 லட்சம் வரை வசூலித்த தாக த.வெ.க.வை சேர்ந்த வழக்க றிஞர் ஞானசுந்தரி என்பவரே



சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார்.

இந்த ஊழல் தொடர்பாக தமிழ்நாடு லஞ்ச ஒழிப்பு துறை விசாரிக்க வேண்டும் என திமுக துணை அமைப்புச் செயலாளர் ப. தாயகம் கவி அவர்கள் DVAC இல் புகார் அளித்தார். ஆனால் ஊழலை ஒழிக்க வந்த உத்தமர் கள் செய்தது என்ன.? புகார் அளித்த அந்த வழக்கறிஞரை கட் சியை விட்டு நீக்கிவிட்டு வழக்கை மூடி மறைக்க பார்த்தனர்.

அரசு வழக்கறிஞர் நியமனத்துக்கு லஞ்சம்!

சமீபத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு வழக்கறிஞர் கள் நியமனங்களுக்கு 15 லட்சம் ரூபாய் வரை லஞ்ச பேரம் நடத் திய தவெக நிர்வாகி அனீஸ் என் பவரது அதிர்ச்சி ஆடியோ வெளி யானது. அது தொடர்பாக ஜெகன் ராஜ் என்பவர் தொடர்ந்த வழக்கில் சென்னை உயர் நீதி மன்ற மதுரைக் கிளை தவெக அரசை நன்றாய் வெளுத்துள்ளது. "லஞ்சம் கொடுத்து வழக்கறி ஞர்களாக வர வேண்டுமா?" என் றும் "இவர்கள் நாட்டை காப் பாற்றுவார்களா அல்லது சட்டத்தைப் பாதுகாப்பார் களா?" என்று கேள்வி எழுப்பி உடனடியாக இப்புகார் மீது தமிழ்நாடு லஞ்ச ஒழிப்பு துறை விசாரணை நடத்த வேண்டும் என உத்தரவிட்டுள்ளது நீதிமன் றம்.

அதோடு "அரசு வழக்கறிஞர் நியமன ஊழல் தொடர்பாக லஞ்ச ஒழிப்புத் துறைக்கு முன் கூட்டியே புகார் அனுப்பப்பட் டும், அவர்கள் ஏன் இன்னும் விசா ரணையைத் தொடங்கவில்லை? புகார் வந்தால் விசாரிக்க மாட்டீர் களா? லஞ்சம் தொடர்பான ஆடியோ ஆதாரங்கள் இருந்தும் ஏன் இன்னும் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்த வில்லை?" என்றெல்லாம் லஞ்ச ஒழிப்புத் துறையின் மந்தமான செயல்பாட்டை நீதிமன்றம் நேர டியாகச் சாடியிருக்கிறது.

ஊழலை மூடி மறைக்க முயன்ற விஜய் சர்க்கார்!

ஊழலை மூடி மறைக்க முயன்ற விஜய் சர்க்காருக்கு உயர் நீதிமன்றம் சவுக்கடி கொடுத்துள் ளது.

இந்த அரசு வழக்கறிஞர் நிய மன ஊழல் மூலம் பல கோடி ரூபாய் வரை லஞ்சம் பெறப்பட் டதாக செய்திகள் வருகின்றன. இந்த பல கோடி ரூபாய், தவெக Party Fund க்கு வசூலிக்கப்பட்டதா? அதுபற்றி விசாரிக்குமா DVAC. இதற்கு பொறுப்பான சட்டத் துறை அமைச்சர் வீட்டில் சோதனை செய்யுமா லஞ்ச ஒழிப்பு துறை?

தூயசக்தி என கொடுத்து வந்த Build up-யை காப்பாற்ற லஞ்ச ஒழிப்புத் துறையை தவெகவின் கிளை அமைப்பாக பயன்படுத்தி வந்தனர். ஆனால் இன்று உயர்நீ திமன்ற மதுரைக் கிளை தூய சக் தியின் லட்சணத்தை தோலுரித்து காட்டியிருக்கிறது. இவர்கள் தூய சக்தியல்ல, TVK ஒரு திருட்டு சக்தி என்பது வெளிப்பட்டுள்ளது.

ஆர்.எஸ்.எஸ் நிர்மல்குமார் தேவையின்றி Take Diversion அரசி யல் செய்தது எல்லாம் இந்த மெகா ஊழலை மறைக்கத்தானா? எந்த கேள்விக்கும் பதில் சொல்லா மல் அவதூறுகளை அள்ளிக் கொட்டி மக்களை மடைமாற்றும் அமைச்சர் நிர்மல் குமாரிடம் நீதி மன்றம் கேட்கும் கேள்விகளுக்கு பதில் உண்டா? உத்தமர் வேடம் போட்ட விஜய் சார் எங்கே போனார்? ஏன் அவர் அரசு வழக் கறிஞர் நியமன ஊழலை பற்றி புகார் வந்தவுடன் விசாரிக்கவில்லை? திமுக சார்பில் அளிக்கப்பட்ட புகாரை இனியா வது DVAC விசாரிக்குமா? இல்லை அதற்கும் நீதிமன்றம் உத்தரவிடும் வரை காத்திருக்க போகிறீர்களா?

டேபிளில் பைல் உள்ளது என கதை விட்டீர்களே! ஆனால் உண் மையில் நீதிமன்றத்தின் டேபிளில் தான் தவெக வினர் செய்துள்ள ஊழல் பைல்கள் உள்ளன. அதில் ஒன்றை நீதிமன்றம் தற்போது open செய்துள்ளது. விரைவிலே தவெக அரசின் ஊழல்கள் ஒவ் வொன்றாய் வெளிவரும்.

கள்வன் கையில் வீட்டு சாவியை கொடுத்த கதையாய் தற்போது தமிழ்நாடு தவெக கையில் மாட்டியுள்ளது. விரை வில் இந்த அயோக்கிய கூட்டத்திற்கு தமிழ்நாட்டு மக் கள் தக்க பாடம் புகட்டுவார்கள்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக் கையில் தெரிவித்துள்ளார்.

விடுமுறை

உத்தமர் காந்தியடிகள் பிறந்த நாளையொட்டி 'முரசொலி' அலுவலகத்திற்கு இன்று **(2.10.2026 - வெள்ளிக்கிழமை)** விடுமுறை!

'முரசொலி'யின் அடுத்த இதழ், வழக்கம் போல **4.10.2026-ஞாயிற்றுக் கிழமை** அன்று வெளிவரும்.


- நிர்வாகி

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(30.09.2026)

சென்னையில் 9 வயது சிறுவன் கழுத்து நெரித்துக் கொலை!



சென்னை கோயம்பேடு நியூ காலனி பகுதியில் 9 வயது சிறுவன் கழுத்து நெரித்துக் கொலை.

குடும்பப் பிரச்சினையில் சிறுவனை கொலை செய்து விட்டு, தலைமறைவான நபருக்கு போலீசார் வலைவீச்சு.

ஓசூர் அருகே கழுத்து அறுத்து பெண் படுகொலை!

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை அருகே செய்வினை செய்ததாகக் கூறி சித்தியைக் கழுத்து அறுத்துக் கொலை செய்த இளைஞர்.

சித்தியை கொலை செய்த அசோக் என்பவர், தேன்கனிக்கோட்டையில் காவல்துறையினரிடம் சரணடைந்தார்.

கொலையான சரசம்மா என்பவரது உடலைக் கைப்பற்றி, காவல் துறையினர் விசாரணை.

த.வெ.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்து, கொலை, கொள்ளை உள்ளிட்ட குற்றச்சம்பவங்கள் அதிகரித்து வருவதால் பொது மக்கள் அச்சம்.

தமிழ்நாட்டில் கடந்த 2 நாட்களில் மட்டும் 12 படுகொலை சம்பவங்கள் அரங்கேறியுள்ளன த.வெ.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு எங்கே?

செய்யாறு அருகே மூதாட்டியை கத்தியால் தாக்கி வழிப்பறி!



திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு ஆற்காடு சாலையில் தனியாக சென்ற மூதாட்டியை கத்தியால் தாக்கி 2 சவரன் நகை வழிப்பறி.

வழிப்பறி கும்பல் கத்தியால் தாக்கியதில் படுகாயம் அடைந்த சரசு என்ற மூதாட்டி செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் அனுமதி.

மூதாட்டியின் கழுத்து மற்றும் தலை, காது பகுதி களில் பலத்த காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதி.

த.வெ.க. ஆட்சியில் கொலை, கொள்ளை, வழிப்பறி சம்பவங்கள் அதிகரித்து வருவதால் மக்கள் அச்சம்.

கடையநல்லூரில் 17 வயது பள்ளி மாணவிக்கு பாலியல் தொல்லை!



தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் வீட்டில் தனியாக இருந்த 17 வயது பள்ளி மாணவிக்கு பாலியல் தொல்லை.

பள்ளி மாணவியிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்ட மணிகண்டன், குணா ஆகிய இரண்டு இளைஞர்கள் போக்சோ சட்டத்தில் கைது.

த.வெ.க. ஆட்சியில் பெண்களுக்கும், பெண் குழந்தைகளுக்கும் பாது காப்பற்ற சூழல் நிலவுவதாக பொதுமக்கள் வேதனை.

தாராபுரத்தில் விஜயின் பிரச்சாரத்திற்காக கடைகளை மூடச்சொல்லி மிரட்டல்!



தாராபுரம் இடைத்தேர்தலில் விஜய்யின் பிரச்சாரத்திற்காக கடைகளை மூடுமாறு வணிகர் களுக்கு த.வெ.க.வினரும், அதிகாரிகளும் மிரட்டல்.

தாராபுரத்தில் விஜய்யின் ரோடு ஷோவுக்காக 8 கி.மீ. தூரம் இரும்புத் தடுப்புகள் அமைத்து மக்களின் வரிப்பணத்தை வீணாக்கும் த.வெ.க. அரசு.

8 கிலோ மீட்டர் தூரத்திற்கு வழிநெடுகிலும் உள்ள அனைத்து கடை களையும் மூட வேண்டும் என வணிகர்களை மிரட்டும் த.வெ.க. அரசு

தாராபுரத்தில் விஜய் பிரச்சாரத்திற்கு கூட்டத்தை சேர்ப்பதற்காக 100 நாள் வேலை திட்ட ஊழியர்களுக்கு பணம் கொடுத்து அழைத்துச்செல்லும் த.வெ.க.வினர்.

மதுராந்தகத்திலும், தாராபுரத்திலும் விஜய் நிறுத்திய வேட்பாளர்களை பொதுமக்கள் விரட்டோ விரட்டு என்று விரட்டி அடிக்கிறார்கள்.

மதுராந்தகத்தில் மரகதம் குமரவேலும், தாராபுரத்தில் சத்தியபாமாவும் பிரச்சாரம் செய்ய முடியாமல் தலைதெறிக்க ஓடிக் கொண்டிருக்கிறார்கள்.

திண்டுக்கல் அருகே பட்டப்பகலில் வழப்பறி!

திண்டுக்கல் மாவட்டம் செம்பட்டி அருகே தனியாக நடந்து சென்ற மூதாட்டியை தாக்கி பட்டப்பகலில் வழிப்பறி.


செம்பட்டி அருகே செல்லாயிபுரத்தைச் சேர்ந்த 65 வயது மூதாட்டி பாரதா என்பவரிடம் 2 சவரன் தங்கச்செயின் பறிப்பு.

ஹெல்மட் அணிந்து இருசக்கர வாகனத்தில் வந்த கொள்ளையன், மூதாட்டியின் கழுத்தில் அணிந்திருந்த 2 சவரன் தங்கச் செயினை பறித்து விட்டு தப்பியோட்டம்.

பட்டப்பகலில் மூதாட்டியிடம் ஹெல்மெட் கொள்ளையன் செயினை பறிக்கும் சிசிடிவி காட்சி வெளியாகி அதிர்ச்சி.

த.வெ.க. ஆட்சியில் கொலை, கொள்ளை, வழிப்பறி சம்பவங்கள் அதிகரித்து வருவதால் மக்கள் அச்சம்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்ய்யா; நடுநிலை நாளேடுன்னு ஒரு காலத்திலே பாராட்டு பெற்ற நாளேடு ஒன்னு, ஜோஸப் விஜய் பற்றி புளகாங்கிதமடைந்து கட்டுரை எழுதி இருக்கே பாத்தியா...

போண்டி : ஆமாய்யா; பார்த்தேன். கூடவே வசூல் ரீதியா தோல்வி அடைந்த 'ஜனநாயகனை அவரோடு 'கம்பேர்' பண்ணி இருக்கே கவனிச்சியா? அரசியல் ரீதியா அவர் தோல்வி அடையக் கூடும் என்பதை நாசுக்கா குறிப்பிடுதா?

5 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல்: தேதி குறிப்பிடாமல் தீர்ப்பு ஒத்திவைப்பு!

சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு!

சென்னை.அக்.2- தேர்தல் வழக்கு நிலுவையில் உள்ள திருச்சி கிழக்கு உள்ளிட்ட 5 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்த தடை கோரிய வழக்கின் தீர்ப்பை சென்னை உயர்நீதிமன் றம் தேதி குறிப்பிடாமல் தள்ளி வைத்துள்ளது.

தேர்தல் வழக்கு நிலுவையில் உள்ள திருச்சி கிழக்கு, அம்பாசமுத் திரம், பெருந்துறை, கரூர், விராலி மலை ஆகிய தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்க தடை விதிக்கக் கோரி திருநெல்வேலியை சேர்ந்த வெங்கடாஜலபதி என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்தி ருந்தார். இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், 5 தொகுதிகளுக் கும் இடைத்தேர்தல் அறிவிக்க தடை விதித்து ஜூலை 10ஆம் தேதி உத்தரவு பிறப்பித்திருந்தது.

இந்த வழக்கில் ஏற்கெனவே மனுதாரர், எதிர்மனுதாரரான விஜய் உள்ளிட்டோர் தரப்பில் வாதங்கள் முன்வைக்கப்பட்ட நிலையில், தேர்தல் ஆணையம் தரப்பில், தேர்தல் நடத்துவது தொடர்பாக நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவுகளை அமல் படுத்த தயாராக இருப்பதாக தெரி விக்கப்பட்டது. இடைத்தேர்தல் நடத்துவது குறித்து தேர்தல் ஆணையம் எந்த முடிவும் இது வரை எடுக்கவில்லை. 6 மாத கால அவகாசம் உள்ளது. தேர்தல் ஆணையம் முடிவெடுக்கும் முன்பு மனுதாரர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என தெரிவிக் கப்பட்டது.

முதல்வர் விஜய் தரப்பில் ஆஜ ரான மூத்த வழக்கறிஞர், தேர்த லில் இரண்டாவது இடத்தை பிடித் தவரை வெற்றி பெற்றவராக அறிவிக்க வேண்டுமெனில், தொகுதியில் இரு வேட்பாளர் மட் டுமே போட்டியிட்டிருக்க வேண் டும். இரண்டுக்கும் மேற்பட்ட வேட் பாளர்கள் போட்டியிட்ட தொகுதிகளில், இரண்டாவது இடத்தை பிடித்தவரை வெற்றி பெற் றவராக அறிவிக்க முடியாது என நீதிபதி பி.பி.பாலாஜி தீர்ப்பளித்துள்ளதாகவும், தமிழகத் தில் அனைத்து தொகுதிகளிலும் இரண்டுக்கும் மேற்பட்ட வேட்பா ளர்கள் போட்டியிட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இந்த வாதத்துக்கு பதிலளித்த தேர்தல் ஆணையம், தெலங் கானா ராஷ்டிர சமிதி வழக்கில் உச் சநீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பின்படி, இரண்டுக்கும் மேற் பட்ட வேட்பாளர்கள் போட்டியிட்டி ருந்தாலும், இடைத்தேர்தல் அறி விக்க முடியாது என விளக்கம் அளிக்கப்பட்டது. அனைத்து தரப்பு வாதங்களும் முடிவடைந்ததை அடுத்து, இந்த வழக்கின் தீர்ப்பை தலைமை நீதிபதி அமர்வு தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்துள் ளது.